[18th February 1959

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், ஏற்கனவே காண்ட்ராக்ட் விட்டுவிடப்பட்டதில் வந்த வருமானத்தை விட இப்பொழுது டிபார்ட் மெண்ட் மூலம் வரும் வருமானம் மிகக் குறைவாக இருக்கிறது. சர்க்கார் இந்தத் தழை காண்ட்ராக்டை அங்கு இருக்கக் கூடிய பஞ்சாயத்து எடுத்து நடத்துவதற்கு பஞ்சாயத்து மூலமாக சர்க்காருக்கு ஏதாவது லெட்டர் வந்துள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பு காண்ட்ராக்ட் விட்டதில் எவ்வளவு வருமானம் கிடைத்தது என்பதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை. விவசாயிகள் சௌகரியத்தை உத்தேசித்து, அவர்களுக்கு பர்மிஷன் கொடுக்கப்பட்டது. அந்த முறைதான். இப்பொழுது கையாளப்பட்ட முறை. மற்றவர்களுக்கு விட்டுவிடுவதை விட, விவசாயிகளுக்கு பர்மிஷன் கொடுக்கவேண்டும் என்பது சிறந்த முறை என்று அரசாங்கம் கருது கிறது.

Supply of manure and seeds

* 451 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state the quantity of manure and seeds distributed to agriculturists through the Shencottah Agriculture Office in 1957–58?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The quantities distributed (rounded to the nearest ton) are :—

Bonemeal—8 tons.

Superphosphate—5 tons.

Muriate of potash—1 ton.

Calcium ammonium sulphate—1 ton.

Paddy and other seeds—4 tons.

Compulsory Social Service for students

* 452 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to make compulsory social service for a student, a prerequisite for the grant of a University Degree?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI N. K. PALANISAMI : சமீபத்தில் யூனிவர்ஸிடி கிராண்ட் கமிஷன் முடிவு இது மாதிரி ஒரு யூனிவர்ஸிடியில் சேருவதற்கு முன்பு ஒரு வருடமாவது சோஷியல் சர்வீஸ் செய்யவேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்படும் என்பதின் மீது சர்க்கார் முடிவு செய்திருக்கிறதா ? என்ன நடவடிக்கை எடுத்தார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : யூனிவர்ஸிடி கிராண்ட் கமிஷன் முடிவின் மீது நடவடிக்கை எடுத்ததாக தகவல் இல்லை.

MR. SPEAKER : How can the hon. Member ask the Government about something that has happened in some other institutions?

Entertainment tax

* 453 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் வருஷத்திலே சினிமாப் படங்கள் திரையிடப்பட்ட நாட்களிலே தமாஷ் வரி மூலம் எத்தனை ரூபாய்கள் வசூலிக்கப்பட்டன?